ஓ.எஸ் 63/06 13.6.18

வாசா.1 நீதிமன்றத்தில் ஆஜரானார் சத்தியபிரமாண வாக்குமூலம் செய்து வைக்கப்பட்டு 1 மற்றும் 3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:

தாவா சொத்து என் குடும்பத்திற்கு பாகபிரிவினை மூலமாக பாத்தியம். யார் யாருக்கு இடையே பாகபிரிவினை நடந்தது என்கிற விபரம் எனக்கு தெரியாது. சரியாக பாகம் நடந்த வருடம் தெரியாது. உத்தேசமாக 1958ல் நடந்தது. எழுத்துமூலமாக தான் பாகம் நடந்தது. பதிவு செய்த பத்திரத்தின் மூலமாக தான் பாகம் நடந்தது. அந்த பாக பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தெரியாது. நான் இளங்கலை பொறியியல் படித்திருக்கிறேன் என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் பட்டியல் பிரமாண வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்டுள்ளதில் பாகபிரிவினைபத்திரம் உள்ளதா என்றால் வாசித்து பார்த்த சாட்சிஇல்லை என்று சொல்கிறார். எனது தகப்பனாருக்கு இரண்டு தாரம். முதல் தாரத்தின் பெயர் ஞானம்மாள். ஞானம்மாள் பிள்ளைகள் மீனாட்சியம்மாள், மங்கலேஸ்வரி. ஞானகி, சீதாலட்சுமி, ருக்மணி மொத்தம் 5 பிள்ளைகள். தகப்பனாரின் 2வது தாரம் ஆவுடையம்மாள். ஆவுடையம்மாள் மூலம் பிறந்தது ஆண் மக்கள் 5 பேர் ஜெயராமன், சுப்பாராஜ், நான், வரதராஜன், கண்ணன். பெண் மக்கள் 6 பேர் ரேணுகாதேவி, விஜயலட்சுமி, பரமேஸ்வரி, வாசுதேவகி, மகாலட்சுமி, வசந்தா. எனது தகப்பனாருக்கு மொத்தம் 16 பிள்ளைகள். இந்த 16 பேரும் கையெழுத்திட்டு ஏதாவது பாகபிரிவினை பத்திரம் எழுதியிருக்கிறார்களா என்றால்இல்லை. சாட்சி தானாகவே முன்வந்து முன்னரே தகப்பனாரின் முதல் தாரமும் அவரது மக்களும் வாய்மொழியாக பிரித்து கொண்டு சென்றுவிட்டதாக செல்கிறார். என் உடன்பிறந்த சகோதரிகள் வாதிகளாக இருந்து என் மீதும் எனது சகோதரர்கள் மீது விருதுநகர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு 41/2004ல் என் குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்து ஒரு பாக வழக்கு தாக்கல்செய்து அவ்வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த வழக்கில்தாக்கல் செய்துள்ள பிராது சார்பு நகல் என்றால் சரிதான் அது பிவாசாஆ.1. பிவாசாஆ1ல் தாவா சொத்து சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. தாவா சொத்து 1958ல் நடந்த பாகத்தில் எனக்கு ஒதுக்கப்பட்டது என்று காட்ட ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்ய இயலுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். மேற்படி 1958ல் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில்தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் தாவா சொத்தானது எத்தனாவது செட்டியூலில் எத்தனாவது இலக்கமாக உள்ளது என்று தெரியுமா ஏ்ன்றால் தெரியாது. இந்த வழக்கில் எனது சகோதரர் சுப்புராஜ் ன் வாரிசுகளை 3 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். எனது இதர சகோதர சகோதரிகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவேண்டிய அவசியமில்லாததால் சேர்க்கவில்லை. நான் கோரும் பாகம் நிருபிக்கப்பட்டால் தான் எனக்கு தாவா சொத்தில் உரிமை உண்டு ஏ்னறாலும் பாகத்தை நிருபிக்காது போனால் எனது தகப்பனாரின் 2ம் தாரம் வாரிசுகள் அனைவருக்குமே சொத்தில் உரிமை உண்டு என்றால் சரிதான். பாகத்தை நிருபிப்பதற்கான ஆவணங்கள் என்னென்ன தாக்கல் செய்திருக்கிறேன்

என்றால் அது பார்த்தால் தான் தெரியும். தாவா சொத்திற்கான பழைய பைமாஸ் எண் தெரியாது. மொத்த விஸ்தீரணமும் பார்த்தால்தான் தெரியும். தாவா சொத்தின் நான்குமாலும் பார்த்தால் தான் தெரியும். தாவா சொத்திற்கு தெற்கே ஒரு கட்டிடம் உள்ளதா என்றால் அதுவும் பார்த்தால் தான் தெரியும். தாவா சொத்தில் தொழில் பயிற்சி நடக்கும் கட்டிடம் உள்ளது. அந்த தொழில் பயிற்சி பள்ளியின் பெயர் டி.ஆர். சுப்புராஜ் நினைவு தொழில் பயிற்சி பள்ளிஎ்னறால் சரிதான். அதை சுப்புராஜ் ன்வாரிசுகள் நடத்துகிறார்கள் என்றால் சரியல்ல. அதை ராஜாராம் என்பவர் நடத்துகிறார். நான் தான் ஒத்திக்குவிட்டுள்ளேன். அதற்கான குத்தகை பத்திரத்தை தாக்கல் செய்யமுடியும். சாட்சி தானாக முன் வந்து தாவா எழுந்தபின்பு வாடகை செலுத்துவதை நிறுத்திவிட்டார்கள் என்று சொல்கிறார். தாவா பிராதில் தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தை குத்தகைக்கு விட்டு அதில் தொழில் பயிற்சி பள்ளி நடந்து வருவதாக சொல்லவில்லை என்றால் பார்த்தால் தான் தெரியும் ஞாபகமில்லை. தாவா சொத்து 36 செண்டு பெட்ரோல் பங்க் தொழில் பயிற்சி ப்ள்ளியும் இருக்கிறதா என்றால் பெட்ரோல் பங்க் வடக்கே இருப்பதாக சொல்லும் சாட்சி பின்னர் இரண்டும் தாவா சொத்தில் உள்ளதாக சொல்கிறார். தொழில் பயிற்சி பள்ளி எத்தனை செண்டில் உள்ளது என்றாலும் பெட்ரோல் பங்க் எத்தனை செண்டில் உள்ளது என்றாலும் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். எந்த ஆவணத்தைபார்த்தால் தெரியும் என்றால் பட்டாவை பார்த்தால் பெட்ரோல் பங்க் எத்தனை செண்டில் உள்ளது என்றும் தொழில் பயிற்சி பள்ளி எத்தனை செண்டில் உள்ளது என்றும் சொல்லிவிடுவேன். தாவா சொத்தில் விவசாயம் செய்திருக்கிறேன் எத்தனை வருடங்களுக்கு முன்பு விவசாயம் செய்தேன் என்றால் பெட்ரோல் பங்க் வருவதற்கு முன்பு செய்தேன். பெட்ரோல் பங்க் ம் தொழில் பயிற்சி பள்ளியும் எத்தனை வருடமாக இருக்கிறது என்பது ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். தாவா சொத்திற்கு வடக்கே3 முதல் 7 பிரதிவாதிகளின் இடம் உள்ளதா என்றால் தெரியாது.

குறுக்குவிசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.